முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 யூலை

## (104) வணிகச் சூழல்

(Business Environment)

2023-08-27
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** தனியுடமை வியாபாரமொன்றுடன் ஒப்பிடுகையில் பங்குடமை ஒன்றின் அனுகூலத்தைப் பின்வருவன வற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) வரையறுக்கப்படாத பொறுப்பு. (2) சட்ட ஆளுமை இல்லை.
(3) இடர்களின் பரம்பல். (4) விரைவான தீர்மானமெடுத்தல்.

**1.2** கீழ்வருவனவற்றுள் போக்குவரத்து முறைமையின் ஒரு கூறாக (element) **அமையாதது** எது?

(1) செயன்முறைப்படுத்தல் (Processing) (2) முனையம் (Terminal)
(3) சக்தி (Power) (4) சாதனம் (Mode)

**1.3** கீழ்வருவனவற்றுள் பூகோளமயமாதலின் ஒரு வாய்ப்பாக **அமையாத** காரணி எது?

(1) கட்டற்ற வர்த்தகம் (Free Trade) (2) மலிவான கூலி.
(3) செயற்பாட்டை விரிவாக்குதல். (4) கலாசார வேறுபாடுகள்.

**1.4** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் அமைக்கப்பட்ட கீழ்வரும் பிரதான தலையீட்டு கொள்கைகளைக் கருதுக:

**(a)** சூழலை அனுமதித்தல்.

**(b)** நவீன பொருத்தமான தொழினுட்பம்.

**(c)** நிதிக்கான அணுகல்.

மேலுள்ளவற்றுள் இலங்கையிலுள்ள SME களின் செயலாற்றுகையை மேம்படுத்தும் கொள்கை / கொள்கைகளாவன:

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.5** கீழ்வரும் கூற்றுகளைக் கருதுக:

**(a)** கொடுப்பனவுகளை காசோலைகள் மூலம் செலுத்தலாம்.

**(b)** கணக்கிலுள்ள மீதிக்கு வட்டி கிடைக்கப்பெறுகிறது.

**(c)** நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களை செயற்படுத்துவதற்கான ஆற்றல்.

மேலுள்ளவற்றுள், நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவர் அதிலிருந்து பெறக்கூடிய நன்மை/ நன்மைகளாவன:

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.6** கீழ்வருவனவற்றிலிருந்து நிதிச் சந்தை தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க:

(1) மூலதனச் சந்தையை முதன்மையான சந்தை மற்றும் இரண்டாம்நிலைச் சந்தை என இரண்டாகப் பிரிக்கலாம்.

(2) பணச் சந்தை என்பது முற்றிலும் நீண்டகால நிதிகளுக்கான ஒரு சந்தை ஆகும்.

(3) திறைசேரி உண்டியல்களும் வர்த்தக உண்டியல்களும் மூலதனச் சந்தையிலுள்ள பிரதான (Instruments) சாதனங்களாகும்.

(4) உரிமையாண்மைப் பங்குகள், பணச் சந்தையிலுள்ள ஒரு சாதனத்திற்கான உதாரணமாகும்.

**1.7** தற்போது ஒப்புக்கொள்ளப்படும் விலையில் எதிர்காலத்தில் கம்பனி ஒன்றின் பங்குகளை வாங்குவதற்கான உரிமையை அளிப்பதற்காக வழங்கப்படும் ஆவணம்:

(1) பங்கு ஆணை (Share Warrant) (2) தகவலேடு (Prospectus).

(3) பங்குச் சான்றிதழ். (4) அமைப்பக விதிகள்.

**1.8** கீழ்வருவனவற்றுள் இலங்கையின் நிதி முறைமையின் ஒரு கூறு **அல்லாதது** எது?

(1) நிதி நிறுவனங்கள். (2) இலங்கை மத்திய வங்கி.

(3) வர்த்தக அமைச்சு. (4) நிதிச் சந்தை.

**1.9** கீழ்வருவனவற்றுள் கூட்டு முயற்சி ஒன்றின் ஓர் அம்சமாக **அமையாதது** எது?

(1) தொடர்ந்தியங்கும் தன்மையற்றது.

(2) பதிவுசெய்தல் அவசியமானது.

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் ஈடுபடுகின்றனர்.

(4) இது குறுங்கால நோக்கத்திற்காக உருவாக்கப்படுகிறது.

**1.10** கீழ்வருவனவற்றுள் தொழில்முயற்சியாண்மையின் வளர்ச்சியின் முக்கியத்துவத்திற்கான காரணமாக அமைவது எது?

(1) சுயமாக தீர்மானங்களை எடுப்பதற்கான ஆற்றல்.

(2) பொருளாதார மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான தேவை.

(3) வணிகத்திலுள்ள சிக்கல்களைத் தவிர்ப்பது.

(4) மேற்கூறிய யாவும்.

*கீழே இல* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதவும்..*

**1.11** காப்புறுதியிலுள்ள இழப்பீட்டுக் கோட்பாடானது காப்புறுதியிலிருந்து இலாபங்களை உருவாக்குகிறது.

**1.12** புறக்குறிப்பிடல் என்பது பெறுநர் (recipient) ஒருவர் தனது பெயரை காசோலைக் குறிப்பீடு ஒன்றாக காசோலையின் பின்புறத்தல் எழுதுவது ஆகும்.

**1.13** வரிவிதிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் SME களின் தோல்விக்கு வித்திடக்கூடிய ஒரு உள்ளகக் காரணியாக இருக்கிறது.

**1.14** சமூக அணுகுமுறைகளில் ஏற்படும் மாற்றமானது பெண்களது தொழில்முயற்சிகளின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான ஒரு காரணியாக இருக்கிறது.

**1.15** இலங்கைப் பொருளாதாரத்தின் ஒரேயொரு பங்குச் சந்தையாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் (CSE) இயங்குகிறது.

*இல.* **1.16** *தொடக்கம்* **1.20** *வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** "முறைசார் அமைப்பு (Formal Organization)" மற்றும் "முறைசாரா அமைப்பு (Informal Organization)" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.17** "இரட்டைக் காப்புறுதி (Dual Insurance)" என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** வணிகம் ஒன்றின் உள்ளகச் சூழலின் இரண்டு (02) மாறிகளை (variables) நிரற்படுத்துக.

**1.19** தொழில்முயற்சியாளர் ஒருவரின் இரண்டு (02) வகிபாகங்களை (roles) நிரற்படுத்துக.

**1.20** "நிலைபேறான அபிவிருத்தி" என்பதால் கருதப்படுவது யாதென வரையறுக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**சோமசிறி** என்பவர் கொழும்பு – ஹொரணை பிரதான வீதிக்கருகில் காய்கறிகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார். அவர் தனது கடையாக அவரது சிறிய லொறியைப் பயன்படுத்துவதுடன் லொறியைச் சுற்றி காய்கறிகளின் விலைகள் அச்சிடப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்தியுள்ளார். அவரது வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் அலுவலகங்களிலிருந்து திரும்பி வீடுகளுக்கு வீதியால் பயணிக்கும் பயணிகளாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **''சோமசிறியின் காய்கறி விற்பனையை''** ஒரு வியாபாரமாக வகைப்படுத்த முடியுமா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) தனியுடமை வியாபாரமொன்றின் மூன்று (03) பண்புகளை (characteristics) **விபரிக்குக.**
(03 புள்ளிகள்)

(c) தனியுடமை வியாபாரமொன்றின் மூன்று (03) அனுகூலங்களைக் (advantages) **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

இலங்கைத் தேயிலையான **எட்மன்ட் தேயிலை,** பல தசாப்தங்களாக ரஷ்யாவில் பிரபலமாக இருக்கிறது. **எட்மன்ட் தேயிலை** இன் தாபகரான **திரு. எட்டி ஹேவகே** ரஷ்ய சந்தையில் தமது தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதிலும் வர்த்தக நாமத்தைப் பதிப்பதிலும் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டுள்ளார். உக்ரைன் - ரஷ்ய போர் காரணமாக பல பொருள்களுக்கு ரஷ்யாவால் வர்த்தகத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால், உலகளாவிய அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைமையானது தனது தேயிலை வியாபாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமெனக் கருதுவதுடன் தனது வியாபாரத்தை இலத்திரனியல் - வர்த்தகம் (E- Trade) ஊடாக மேற்கொள்வதற்குத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) "வர்த்தகத் தடைகள் (Trade Sanctions)" என்பதால் கருதப்படுவது யாதென **வரையறுக்குக.**
(02 புள்ளிகள்)

(b) **எட்மன்ட் தேயிலை**க்கான இலத்திரனியல் வர்த்தகத்தின் மூன்று (03) பிரதிகூலங்களைக் **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(c) வியாபாரங்கள் ஊடாக அரசாங்கம் அடைந்து கொள்ள எதிர்பார்க்கும் மூன்று (03) பொருளாதார நோக்கங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**எக்ஸ்பிரஸ் லொஜிஸ்ரிக்ஸ்** என்பது சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைக் கம்பனிகளுக்கு ஏற்பாட்டியல் சேவைகளை வழங்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். இது, நிலவும் பொருளாதார நெருக்கடியால் ஏற்படுகின்ற அதிக செலவுகள் காரணமாக தமது இலாப எல்லையில் கடுமையான சரிவைச் சந்தித்து வருகிறது. இதனால் இக்கம்பனியின் முகாமையானது ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட ஒரு புதிய வணிகத்தை ஆரம்பிக்கத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஒரு நிறுவன உற்பத்திப் பொருள்களின் வகையைப் பொறுத்து பயன்படுத்தப்படும் இரண்டு (02) வகையான ஏற்பாட்டியல் முறைமைகளை (logistic systems) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) சர்வதேச வர்த்தகத்தில் நுழைவதால் ஏற்படும் மூன்று (03) அனுகூலங்களை **விபரிக்குக.**
(06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**சஞ்ஜீவ** என்பவர் **வரையறுக்கப்பட்ட கிளீன் வொஸ் (தனியார்) கம்பனியில்** சந்தைப்படுத்தல் தலைவராக இருக்கிறார். **சஞ்ஜீவ,** ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள **வரையறுக்கப்பட்ட கிளீன் வொஸ் (தனியார்) கம்பனியின்** விற்பனைப் பிரதிநிதிகளைச் சேர்த்து வாட்ஸ்அப் குறூப் (WhatsApp group) ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் குழு உறுப்பினர்களிடையே முக்கியமான மற்றும் அவசரமான செய்திகளைப் பரிமாற எண்ணுகிறார். எவ்வாறாயினும், சில பிரதிநிதிகள் இந்த அரட்டை குழுவின் நிரந்தரப் பாவனையாளர்கள் அல்ல. இந்தக் குழுவுக்கு மேலதிகமாக சிரேஷ்ட முகாமைக்காக உருவாக்கப்பட்டுள்ள வாட்ஸ்அப் குறூப் இலும் ஓர் உறுப்பினராக **சஞ்ஜீவ** இருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட கிளீன் வொஸ் (தனியார்) கம்பனியால்** பயன்படுத்தப்படும் மேற்படி தொடர்பாடல் முறையின் மூன்று (03) குணவியல்புகளைக் (qualities) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கம்பனி, மேற்படி தொடர்பாடல்களைத் தொடர்வதன் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)

(c) “தொடர்பாடலைத்” தவிர வணிக நடவடிக்கைகளின் தடங்கலற்ற தொழிற்பாட்டிற்கு **வரையறுக்கப் பட்ட கிளீன் வொஸ் (தனியார்) கம்பனி**க்குத் தேவையான மூன்று (03) ஆதரவுச் சேவைகளைக் (supportive services) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**சாந்தன்** என்பவர் வாத்துவ பிரதேசத்தில் வசிக்கின்ற ஒரு தனியுடமை வியாபாரி ஆவார். அவர் வீட்டைச் சுத்தம் செய்யும் கருவிகளை வியாபாரம் செய்வதில் ஈடுபட்டுள்ளார். அவர் இந்தக் கருவிகளை வீட்டிலிருந்தவாறு சிறிய அளவு உற்பத்தியில் ஈடுபடுவோரிடமிருந்து சேகரித்து, அவற்றை அம்பாறை மற்றும் மொணராகலை பிரதேசங்களில் விற்பனை செய்கிறார். அவருடைய பொருள்கள் அந்தப் பகுதிகளில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை ஆகும். அவர் மூன்று சிறிய லொறிகளையும் கடையாக மாற்றப்பட்ட ஒரு வீட்டையும் வைத்திருக்கிறார்.

அவர் வியாபாரம் செய்யும் பொருள்கள் ஒப்பீட்டளவில் மலிவானதாக இருப்பதுடன் அவை இரண்டாம் தரப் பொருள்களாகவும் இருக்கின்றன. இந்தத் தரமும் விலையும் சந்தைத் துண்டத்திலுள்ள வாடிக்கையாளர்களின் தேவைகளுடன் பொருந்துகின்றன என்று அவர் கருதுகிறார். எவ்வாறாயினும், அவருடைய அபிப்பிராயத்திற்கு இணங்க, இந்த இரண்டாந் தரப் பொருள்கள் ஏனைய பிரதேசங்களிலுள்ள குறிப்பாக மேல் மாகாணத்திலுள்ள வாடிக்கையாளர்களின் தேவைகளுடன் பொருந்தவில்லை.

சமீப காலமாக நாட்டில் அதிகரித்து வரும் எரிபொருள் செலவைத் தாங்கிக் கொள்வதில் அவர் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார். மேலும் எரிபொருள் செலவு மற்றும் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களின் கிரயம் என்பவற்றின் அதிகரிப்பு காரணமாக வழங்குநர்கள்கூட விலையை அதிகரித்துள்ளனர். இது, அவர் துப்புரவு செய்யும் கருவிகளின் விற்பனை விலைகளை அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இந்த விலை அதிகரிப்பானது ஆரம்பத்தில் அவரது அதிகளவான வாடிக்கையாளர்களை ஏமாற்றமடையச் செய்தது. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்தக் கருவிகள் சிலவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களை பெறுவதில் தயாரிப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனால், பொருத்தமான பகுப்பாய்வொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் **சாந்தன்** தனது உள்ளக மற்றும் வெளிவாரியான வியாபாரச் சூழலை விளங்கிக்கொள்ள எதிர்பார்க்கிறார். அதே சமயம், தனது நண்பர் ஒருவருடன் பங்குடமை ஒன்றில் இணைந்து அநுராதபுரம் பிரதேசத்திற்கு தனது வியாபாரத்தை விரிவாக்குவதற்கும் முயற்சிக்கிறார். வியாபாரத்தை விரிவாக்குவதற்கான வங்கிக்கடனும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி **சாந்தனின்** வியாபாரச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) **சாந்தன்** ஒரு தொழில்முயற்சியாளரா (entrepreneur) அல்லது ஒரு தொழிலதிபரா (business person) என்பதை **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) பங்குடமையை அமைப்பதில் **சாந்தன்** இணைக்கக்கூடிய மூன்று (03) வகையான பங்காளர்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(d) **சாந்தன்** காப்புறுதி செய்ய முடியாத இரண்டு (02) இடர்களை (risks) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(e) வியாபார நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற இரண்டு (02) வசதிகளைக் (facilities) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |